உ

சிவமயம்

சுன்னுகம்

குமாரசுவாமிப் புலவரது தந்தையாராகிய

சி. அம்பலவாணபிள்ளையுடைய

இறந்த தொண்ணூற்றுநான்காம் ஆண்டு

# நினைவு மலர்

## புகழ்மாலை

நீர்வேலி

வித்துவான் சபாபதிப்பிள்ளை அவர்கள்

இயற்றியது

**மு. குமாரசுவாமி**

புலவரகம்: மயிலணி

சுன்னுகம்

**1980**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சுன்னாகம்

குமாரசுவாமிப் புலவரது தந்தையாராகிய

**சி. அம்பலவாணபிள்ளையுடைய**

இறந்த தொண்ணூற்றுநான்காம் ஆண்டு

# நினைவு மலர்

## புகழ்மாலை

நீர்வேலி

வித்துவான் சபாபதிப்பிள்ளை அவர்கள்

இயற்றியது

**மு. குமாரசுவாமி**

புலவரகம்: மயிலணி

சுன்னாகம்

**1980**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவரக வெளியீடு: 24

முதற் பதிப்பு—1886
இரண்டாம் பதிப்பு—1980

திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலவாணபிள்ளை சரித்திரம்

*(1808—1886)*

எமது பேரனாராகிய சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரது தந்தையாராகும் சி. அம்பலவாணபிள்ளை வரகவி முத்துக்குமார கவிராயர் தம்பி சின்னத்தம்பிப்பிள்ளைக்கும் காமாட்சியம்மைக்கும் புத்திரராக 1808ஆம் ஆண்டு பிறந்தனர். அவர் அக்காலத்தில் மயிலணியில் வசித்த வேதாரணியம் சுவாமிநாத தேசிகரிடம் சமய தீக்கை, விசேடதீக்கை என்னும் இரண்டையும் முறையாகப் பெற்றுச் சைவாசார சீலராய்ச் சிவபூசை, செபம், தியானம், தவம் ஆதியவற்றைப் பக்தி சிரத்தையோடு கடைப்பிடித்து ஒழுகிவந்தனர். அவர் நித்தியமும் பக்தியோடு தேவாரம், திருவாசகம், கந்தபுராணம், இராமாயணம் முதலிய நூல்களைப் பாராயணம் செய்யும் வழக்கமுடையவர். தமிழிலக்கிய விலக்கணங்களையும் சைவ சாஸ்திரங்களையும் தமது பெரியதந்தையாரிடம் கற்று வல்லவராயினர்.

அம்பலவாணபிள்ளை குமாரு உடையார் மகள் சிதம்பர அம்மையாரை 1840ஆம் ஆண்டு விவாகஞ் செய்து சிவகாமியம்மை, காமாட்சியம்மை என்னும் இரு புத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் குமாரசுவாமிப்புலவர் என்னும் புத்திரனையும் பெற்றனர்.

அவர் சுன்னுகம் மயிலணிக் கந்தசுவாமி கோயிற் பரி பாலன சபையில் அங்கத்தவராயிருந்து கோயிலைச் சிறப் புற நடாத்தினர். கோயிலின் ஆடிமாசப் பூசைக்காகத் தமது இலகடி என்னும் தோட்டத்தின் ஒரு பகுதியைக் கோயிலுக்கு மரணசாதனம் செய்தனர்.

அவர் 1886ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்க்கையை விட்டபோது அவருடைய குணமாண்புகளை நன்கறிந்த நீர் வேலி வித்துவான் சபாபதிப்பிள்ளை கூறிய புகழ்ப்பாக்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

மயிலணி, **மு. குமாரசுவாமி**

சுன்னுகம்.

1-1-80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலவாணபிள்ளை புகழ்மாலை

## வெண்பா

சீர்வியம் வைகாசி சேரபர நற்றசமி
பார்வியா மூக்கிழமை பற்றுதினம்—ஊர்விடையின்
அம்பலவா ணன்கருணை அம்பலர்வா ணன்சுன்னை
அம்பலவா ணன்பால் அறி.

## விருத்தம்

மலரயனும் அவர்மகளின் மகிழரியும் மணவரிய
மலர்சிவா நந்த மதுவை
மாந்திஇறு மாந்துவரு மாந்தர்தரம் ஆய்ந்துகொடை
மன்புரியும் அன்பு வாய்ந்தோர்
மைந்தினுறும் ஐந்துவித பந்தமெதிர் வந்துதமின்
மருவினும் அவற்றின் வலியால்
மறுகிவலி சிறிதெனினும் மறுவுறுதல் இன்றியுள
மதுரகுண மதுகை மாருர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியினொடு நதியணியும் அதிபனடி விதிபரவு
மாலடியர் போல மான்பாய்
வாரிநிதி சேரினுநல் வாரிசுவை ஓர்சிறிது
மாறுநெறி இன்றி மன்னும்
வரிநகுல கிரியினிடை வருமதுர ரசமுடைய
வரதீர்த்தம் மருவு வகையால்
வானுலகும் வந்தனைசெய் வானுடைய யாழ்ப்பாண
மாறிலிந் நாட்டு வழியே

அலரயன கதியுடைய அலரியொடு முளரிஒளி
அலவனிவை விழிக ளான
அத்தனமர் செய்வெள்ளி அத்திரிதன் மெய்கொள்ளும்
அத்தகைய உருவம் மாறி
அன்னபெய ரொடுதிகழ்வ தன்னதாய்ச் சுன்னுகம்
ஆனபெய ரால் அமர்ந்தே
அரிஅயனும் மறையும்அறி வரியபடி மறையும்அறி
அரியுருவ மான வரனும்
அம்மையும்நன் மைந்தருடன் அம்மையுள மைந்தருள
அம்மவுறை கோயில் கொண்டே
அளவில்வள நிதியுடைய அளகையனும் ஒருவனல(து)
அளவில்பலர் ஆன வாபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரஞ் செல்வர்களும் ஆயிரங் கல்விவல
ஆயிரந் தொண்டர் தாமும்
அன்றுமுதல் இன்றுவரை அன்றுமியல் பின்றிவளர்
அகலிடம தாய நகரில்

பலரயன நிலவஅருள் வலநிதிகொள் குலனுறுச
பலஉழவர் மரபில் வந்தோன்
பண்பழகு மண்பழகு பலகலைகொள் புலநிலைகொள்
பாக்கியம் தேக்கு பாத்ரம்
பத்திகொள்சின் னத்தம்பி மெய்த்தவம்வி ளைத்தெய்து
பயனனைய பசிய பாலன்
பாவரைய ஞானமுறு பாவனையின் ஞானசிவ
பாதமலர் பத்தி பண்ணி
பற்றினுடன் அக்கமணி பற்பமிவை நித்தம்அணி
பரிசுவழு வாது பரவி
பகர்துதிய தீக்கைகொடு பகல்இரவு நீக்கமறு
பரமனை வணங்கு பரிசான்
பாரினுயர் கற்பிலகு மாரியொடும் இற்கிழமை
பண்புறந டாத்து சீலன்
பன்னும்அம் பலவாணன் என்னுமொரு நாமமுறு
பரவுபுகழ் விசய சிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொலரயனின் வலிமைபொலி புலமையொடு நலனெழுகுந்
தூய்மைகொள்கு மார சாமித்
தோன்றலொடும் ஆன்றநெறி தோன்றிருவர் மாண்தகைய
துங்கவிழி மங்கை மாரை
தொல்லைபுரி எல்லையறு நல்வினையின் வல்லபத்தின்
தொடர்உறவின் ஈன்ற பெரியோன்
தொடைகொள்அம் பலவாண னெடுசீனி வாசகனைச்
சூழ்மருகர் ஆக உற்றோன்
சொல்நயக் கல்வியொடு சொன்னயஞ்சேர் செல்வமெனும்
தோமிலிரு பொருளில் ஓங்கும்
தூயஇவன் இவ்விய மேயவை காசிமதி
தோன்றபர தசமி திதியில்
தொடர்குருவின் வாரமதில் அடைஇரவிவ் வாரமுறு
தூலஉடல் தன்னை விட்டுச்
சுத்தசிவன் உத்தமப தத்தினுறு சித்தமொடு
துய்யநிலை எய்தி னனே.

### கட்டளைக் கலித்துறை

சுன்னாக நற்பதி அம்பல வாணன் தொடர்பிறவி
சுன்னாக நற்பதி கம்பல பாடித் துகளின்மணி
சுன்னாக நற்பதி நீறும் அணிந்து துதிபரவிச்
சுன்னாக நற்பதி சோதி பதத்தில் துலங்கினனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவளி

சுப்பிரமணியம்
அருணாசலம் மகள்
|
அம்பலவாணர்
சிங்கவிதானே மகள்
|

முத்துக்குமாரகவிராயர் (1780-1850)
கதிராசியம்மை

சின்னத்தம்பிப்பிள்ளை (1798-1879)
காமாட்சிஅம்மை
|

வள்ளிஅம்மை
தில்லையம்பலம்

சின்னம்மை
தில்லையம்பலம்

இராமுப்பிள்ளை

அம்பலவாணர் (1808-1886)
சிதம்பரம்மை (இ. 1864)
|

காமாட்சிப்பிள்ளை
(இ. 1892)
அம்பலவாணர் (இ.1911)

குமாரசுவாமிப்புலவர்
(1854-1922)
சின்னாச்சியம்மை
(1861-1907)
|

சிவகாமிப்பிள்ளை
(இ. 1933)
சீனிவாசகம்
(இ.1919)

விசாலாட்சியம்மை
(1893-1925)
கனகசபை (1897-1975)

அம்பலவாணபிள்ளை
(1894-1974)
ஆச்சிமுத்தம்மையார் (1896-1966)

முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை
கமலாம்பிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் சபாபதிப்பிள்ளை அவர்கள்

# வரலாறு

## 1825 — 1890

வித்துவான் சபாபதிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள நீர்வேலி என்னும் கிராமத்தில் சைவ வேளாளர் குலத்திலே சண்முக உடையாரின் மகனாகிய பீதாம்பரப் புலவரின் இரண்டாவது மகனாக 1825ஆம் ஆண்டளவில் பிறந்தார். அவருக்கு முத்துக்குமாரசுவாமி, தியாகராசா என்னும் இரு சகோதரர் உளர். பீதாம்பரப் புலவர் இருபாலைச் சேனாதிராய முதலியாரின் மாணவகர். அவர் செய்யுள் நூல்கள் பலவற்றை இயற்றிப் பெரும் புலவராகத் திகழ்ந்தனர். சபாபதிப்பிள்ளையும் தகப்பனாரிடத்துக் கற்று வல்லவராகித் தகப்பனார்போன்று செய்யுள் நூல்கள் பலவற்றை இயற்றிச் சிறந்த புலவராக விளங்கினார். அவர் இயற்றிய நூல்களுள்ளே இப்போது கிடைக்கக்கூடியன அரசகேசரிப்பிள்ளையார் ஊஞ்சல், அம்பலவாணபிள்ளை புகழ்மாலை என்னும் இரண்டுமாகும். அவர் சமயதீக்கை, விசேடதீக்கை என்னும் இரண்டையும் பெற்றுச் சைவாசார சீலராய்ச் சிவபூசையைத் தவறாது செய்யும் வழக்கமுடையவர். அச்சுவேலியில் விவாகஞ் செய்து பிள்ளைப் பேறில்லாது இருந்துவரும் காலத்தில் தமது நேரத்தின் பெரும்பகுதியைச் சமயப்பணி செய்வதிலும் தமிழ்த் தொண்டு புரிவதிலும் செலவிட்டார். அவர் 1890ஆம் ஆண்டளவில் இவ்வுலக வாழ்வை நீத்துப் பரலோக வாழ்வை எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org